# செவ்வானம்

கார்த்திகை 2010 | ஆரம்பம் : புரட்டாதி 2002 | இதழ் : 26 | இலவசம்

### சிந்தித்துச் செயற்படல்...

குருநகர் மக்களின் இன்றையப் பிரச்சனையாக புனித யாகப்பர் ஆலய வளவை விஸ்தீரணம் செய்தல், றோளர் படகுகளை மீண்டும் கடற்றொழிலுக்கு ஈடு படுத்த அனுமதித்தல், போரினால் வீடுகள் சேதமடைந்து வீடற்று வாழும் குடும்பங் களுக்கு புனரமைப்புச்செய்ய உதவுதல் போன்ற பிரச்சனைகள் முற்றுப்பெற வேண் டும் என்பது பலரது விருப்பமாகும்.

இவற்றைச் செயற்படுத்துவதற்கு ஒன் றுபடுத்தலான தலைமைத்துவம் அவசியம். ஒற்றுமையாக வாழ்ந்த சமுதாயம் இன்று பல கூறுகளாகி நிற்கின்றது. தொழில்வளம் நிறைந்த ஊர் இன்று ஆழ் கடல் தொழில் செய்யமுடியாமலும் இழந்தவற்றை மீளப் பெற முடியாமலும் தவிக்கின்றது.

குருநகரின் அமைவிடம் காரணமாக நீண்டதூரம் சென்றே மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளுகின்றார்கள். அங்கேயும் அந் நியரால் கடல்வளம் ஏராளமாகச் சுரண்டப் பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல அனு மதி மறுக்கப்பட்டிருந்ததால் கல்வியை முனைப்புடன் கற்றுவந்தனர். இன்றோ தலைகீழாக மாறியுள்ளது.

வறுமையை மையமாக வைத்து உரிய வருமானத்தைக் கருத்திற்கொண்டு கல்வி கற்றலை பாதியிலே நிறுத்தி கடற்றொழிலில் ஈடுபடுகின்றார்கள். இதற்கு பெற்றோரின் பூரண அனுமதி உண்டு. இதனால் தன் பிள்ளையின் எதிர்காலம் பாழாய்ப் போகின் றதே என்பதை அவர்கள் சிந்திக்க மறுக் கிறார்கள்.

எனவே, இப்படியான நிலைப்பாடுகள் வேரூன்றி நிலைத்திட விடாமல் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

**புனித யாகப்பர் ஆலயம்**



**150 ஆவது யூபிலி ஆண்டு**

**25.07.1861**
**25.07.2011**

பிற்பகல் வேளை....

யாழ்,போதனா வைத்தியசாலைக்கே உரிய இயல்பான சத்தம், சந்தடிகள், பரபரப்பு...

நோயாளரைப் பார்ப்பதற்காக உள்ளே போவோரும், பார்த்து விட்டு வருவோரும் கடுகதிவேகத்தில்.

ஒரு வழிப்பாதை என்பதால் உரசல்கள், மோதல்கள், மிதிப்புகள், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு இச்செயல்கள் செயற்கையாகவும் மேற்க் கொள்ளப் படுகின்றதை அவதானிக்க கூடியதாகவும் இருப்பது அநாகரிகமானதே.

வைத்தியசாலை வளவின் கிழக்குப் பக்கமாக பிள்ளையார் கோயில் - பக்தர்களின் வேண்டுதல்கள் - காணிக்கைகள். பக்கத்தே சிற்றுண்டிச்சாலை.

அதன் பக்கத்தே யாரும் நெருங்க விரும்பாத 26ஆம் இலக்க வாட், புற்றுநோயாளர்களுக்கானது.

வாட்டின் உள்ளே அவலங்கள், முனகல்கள், அழுகை, தேற்றல்.

வாட்டிற்கு வெளியே மரங்கள்-

'கருணைப் பூங்கா' - ஐந்தாறு சாய்மனை வாங்குகள்.

ஒரு வாங்கில் கூனிக்குறுகி அவன் அமர்ந்திருக்கிறான்.

தன் முகத்தை தெரியாதவாறு துவாய்த்துண்டால் மறைத்தபடி. வாயிலிருந்து வழியும் வீணிபோன்ற எச்சிலை அடிக்கடி துண்டால் துடைத்துக் கொள்ளுகின்றான்.

26ஆம் வாட்டைக் கடந்துதான் வேறு பல வாட்டுகளுக்கு செல்லவேண்டும். அந்த வாட்டைக் கடந்து செல்பவரில் பலர் முகத்தை மறுபக்கம் திருப்பிச் செல்கிறார்கள். சிலர் அனுதாப் பார்வையுடன் செல்கிறார்கள்.

ஓரிருவர்,

## இது கதையல்ல...

"செய்த கருமத்துக்கு இப்ப அனுபவிக்கிறார்கள்"- இதுவும் அவனுக்கு கேட்கிறது. அவன் நிமிரவில்லை.

அடுத்தடுத்து எத்தனையோ வாட்டுகளில் சிகிச்சைக்காக வந்தவர்கள் சுகமடைந்து செல்லுவதும், பிள்ளையை பெற்றெடுத்தவள் மலர்ச்சியுடனும் - கை கால்களை இழந்தவர்கள் கூட இந்தளவுடன் தப்பித்தோமே என்ற நினைப்புடனும் செல்வதைக் காணுகிறான்.

அவனுக்கு, இவர்கள் வருத்தம் மாறி செல்வது மிகவும் சந்தோசத்தைக் கொடுத்தது. இருந்திட்டு எப்பவாவது அழுகையும், ஒப்பாரியுமாக, மார்பில் அறைந்தவாறு வருவதைக் காணும்போது நமக்கு வராத சாவு..

மாற்ற முடியாத வியாதி; மனிதனின் அங்கங்களை அரித்தெடுக்கும் வியாதி, முகம் கறுத்து, மயிர் உதிர்ந்து பெற்றவளே தன் பிள்ளைதானோ என இனங்காண முடியாமல் தவிக்கச் செய்துவிடும் பயங்கரமான வியாதி.

இத்தனைக்கும் மத்தியில் வெண்ணிற உடையில் அவர்கள் ஆற்றும் பணி...

நேற்று இதே வாட்டில் இறந்துபோன பெண்ணின் கண்ணீர் அஞ்சலி நோட்டிஸ். உறவுகள் விநியோகிக்கிறார்கள். அவனும் வாங்கிப் பார்க்கிறான்.

"இந்த அழகு தேவதையா அவள்"- அவன் வாய் மெதுவாக முணு முணுக்கிறது.

கான்சரின் கொடூரத்தை மென்மேலும் உணர்கிறான், மரணம் வரும் வரை எம்மை ஏன் வைத்திருக்க வேணும்?

நாம்தான், சுகமாக்க முடியாத அவலப் பிறவிகளாச்சே எம்மைக் கொன்று...

என்னையும் ஏற்ற பிரேத வண்டில் வரும்.

அவன் அமைதியாக வாட்டின் உள்ளே செல்கிறான்.

**- குருநகர் யோகி**

# குருநகர் இளையோரே விழிப்படையுங்கள்

ஒரு சமுதாயத்தை உயர்வடையச் செய்வதில் அதிக பங்களிப்பை அச் சமுதாயத்தில் உள்ள இளையோரே வழங்குகிறர்கள். அவர்கள் நற்பண்புகள் உள்ளவர்களாகவும் சமுதாயத்தில் உள்ள குற்றங்குறைகளை களைந்து தமது சிறப்பான நடவடிக்கைகள் மூலம் அச்சமுதாயத்தை ஏனைய சமுதாய மக்கள் மதிக்கக் கூடியதாக வழிநடத்திச் செல்ல வேண்டிய கடப்பாடுடையவர்கள். இளையோர் நற்பண்புகள் இல்லாது அழிவான நிலையில் தம்மை மாற்றினால் அந்தச் சமுதாயமும் முன்னேறாமல் அழிவடைந்தே செல்லும்.

குருநகர் இன்று சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருகிறது, விளையாட்டு என்றால் இலங்கையில் மட்டு மல்லாது ஏனைய புலம் பெயர்ந்த நாடுகளிலும் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் மற்றவர்களால் புகழ்ந்து கதைக்கக்கூடிய அளவிற்கு புகழடைந்துள்ளது. அதே நேரத்தில் யாழ்/ சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயமும் உதை பந்தாட்டப் போட்டியில் முன்னணி பாடசாலையாக மிளிர்கின்றது, கல்வியைப் பொறுத்தவரை எமது பாடசாலை களான, யாழ்/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை பொதுப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை அடைந்து வருகின்றன. 2010ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின்படி யாழ்/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை யில் இரு மாணவிகள் சித்தியடைந்துள்ளார்கள். இத்தகைய வெற்றி இதற்கு முன் கிடைக்கவில்லை. இதற்காக இப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கல்வியில் ஆர்வமுள்ள அமைப்புகள் அனைவரையும் பாராட்டுதல் வேண்டும்.

குருநகரைப் பொறுத்த வரையில் களியாட்டங் களுக்கு அதிக பணம், நேரத்தை நாம் செலவழிக்கிறோமே தவிர கல்விச் செயற்பாடுகளுக்கு நாம் பின்னடைவான நடவடிக்கைகளையே கடைப்பிடிக்கிறோம். இதனை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எனினும் எமது ஊரில் கல்வி வளரவேண்டும் கல்வியில் எமது மாணவச் செல்வங்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுகொள்ள வேண்டும் என இங்குள்ள மற்றும் வெளிநாடுகளிலுள்ள எமது மண்ணைச் சேர்ந்த மக்களும் பொது அமைப்புக்களும் தமது பங்களிப்பை வழங்கி வருகிறார்கள். இது பாராட்டப்பட வேண்டியது மட்டு மல்லாமல் இவர்களது இச்செயற்பாட்டிற்கு நாம் மனதள விலாவது எமது பங்களிப்பை வழங்கவேண்டும்.

எமது மாணவச் செல்வங்கள் கல்வியில் உயர்வடை வதற்கு எமது கிராமத்தில் அமைதியான சூழல் உருவாக்கப்பட வேண்டும், அப்போதுதான் அவர்கள் நாளாந்தம் பாடசாலை யில் கற்கும் கல்வியை இரவிலோ அல்லது விடுமுறை நேரங்களிலோ மீட்கமுடியும். ஆனால் எமது ஊரில் நாளாந்தம் நடக்கும் அளவிற்கு மீறிய வானொலி மற்றும் களியாட்ட இசைகள் இதற்கு தடையாக உள்ளதை நீங்கள் அறிவீர்கள். எனவே இவைகளை கட்டுப்படுத்தி சமுதாயத்தை நல்வழிப் படுத்துவதில் பொது அமைப்புக்களுக்கு ஆலோசனை வழங்குவது உங்கள் கடமை என்பதனை நீங்கள் இன்னமும் உணராமல் இருப்பது ஏன்?

எங்கள் ஊரில் கல்வி கற்றவர்கள் எமது ஊரில் உள்ள அமைதியற்ற சூழல், மாறிச்செல்லும் பழக்கவழக்கங்களால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படும் என்ற நோக்குடன் வேறு அமைதியான இடங்களுக்கு குடிபெயர்ந்து செல்ல ஆரம்பித்துள்ளார்கள்

எமது ஊரில் மக்கள் தொகை அதிகம். வீடுகள் குறைவு. குறுகிய பரப்பளவுள்ள சிறிய எமது வீடுகளிலேயே பல குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். எமது மக்கள் பொரு ளாதார கஷ்டத்தில் வாழ்கிறார்கள். எமது மக்களுக்கான குடியிருப்புக்கள் வேறு இடங்களில் அமைக்கப்படவேண்டிய கட்டாய சூழ்நிலை. தற்போது அல்லைப்பிட்டியில் எமது மக்களில் சிலர் குடியேற உள்ளார்கள். அங்கு அவ்வூர் மக்களுடன் இணைந்து வாழவேண்டும். எமது ஊரில் உள்ள இத்தகைய பழக்கவழக்கங்களை நாம் மாற்றினாலேயே நாம் அவர்களுடன் சேர்ந்து வாழமுடியும். எனவே எமது ஊரை கல்வியில் உயர்வடைவதற்கு தடையாக உள்ள காரணிகளை களைய இளைய தலைமுறையே உனது பங்களிப்பை வழங்க விரைந்து எழுந்திடு!

**- திலிப்**

## நான் யார்?

நான் யார் என்று தெரிகிறதா? இப்படிக்கேட்டால் எப்படிச் சொல்வதென்ற குழப்பமா? உணர்வுகளை அசைவுகளை அறிந்து கொள்பவன். இப்போதாவது கண்டு பிடித்தீர்களா? நான் தான் கண்.

மனிதர்களுக்கு மட்டும் அன்றி விலங்குகள், பறவைகள், மீன்கள் என எல்லா உயிரினங்களிலும் நான் இருக்கின்றேன். மாடு சிவப்பு நிறத்தைக் கண்டால் மிரளுகின்றது என்றும் பூனைக்குப் பச்சை நிறம் பிடிக்கும் என்றும் கூறுவதை எல்லாம் நம்பி விடாதீர்கள். விஞ்ஞான விந்தைகள் நிகழும் உலகில் வாழ்ந்து கொண்டு இருக்கும் நீங்கள் நம்பி விடக்கூடாது என்பதற்காகவே இதை சொல்கிறேன்.

நான் எல்லோருக்குள்ளேயும் இருக்கின்றேன். நான் சிவப்பாக இருந்தால் தாய்ப்பால், எண்ணெய், பச்சிலை போன்றவற்றை விட்டால் எனக்கு பாதிப்பு ஏற்படும். எனக்குப் பாதிப்பு ஏற்பட்டால் உங்கள் வாழ்க்கையும் இருண்டதாகிவிடும். எனவே உங்களுக்கு நான் வேண்டும் என்றால் என்னை பாதுகாப் பது உங்கள் கடமை என என்னைப் பற்றிய சிறிய கருத்தை முன்வைத்துச் செல்கின்றேன்.

**- மொறிஸ் நிஷாந்தன்**

## கவிதைகள் இரண்டு

**- லக்ஸ்மன் றொபட்யோயல் -**

### நட்பு

ஆபத்தில் உதவும்
அன்பே நண்பன்
அவனருகே இருப்பின்
துன்பங்கள் கிடையாது.

நட்பில்லா உலகிலே
நாளும் சுகம் கிடையாது
கற்பது நனி சிறந்திட
நட்பும் அங்கே பூக்கின்றது.

வாழ்க்கையின் சுமைகள்
பற்பல கண்டாலும்
நண்பர்களின் தோள்களே
பலமாக அமைகின்றன.

எதிர்பார்ப்பற்ற நட்புக்கள்
இருந்தாலுமே
என்றும் இளமையுடன்
வலம்வந்து கொள்ளலாம்.

### பூக்கள்

சின்ன சின்ன பூக்கள்
அழகான பூக்கள்
வண்ண வண்ண பூக்கள்
வகை வகையான பூக்கள்.

நாங்கள் பார்க்காத பூக்கள்
இனிய இனிய பூக்கள்
பல நிறங்களில் பூக்கள்
தங்கமான பூக்கள்.

# குருநகரின் மேம்பாட்டுக்காய் உழைத்தவர்



**டோ**றஸ் என யாவராலும் அழைக்கப்பட்ட டோறஸ், குருநகர் வியானிமூர் இராஜசிங்கம் தந்த தவப்புதல்வன். தனக்கென வாழாது தனது குருகுல மக்களின் விடிவிற்காய் வாழ்நாள் முழுவதும் தன்னை அர்ப்பணித்த பெருமகன். அவன் பெற்றுத்தந்த பல நன்மைகளை குருநகர் மக்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவற்றைப் பெற்றுத் தந்தது அவர்தான் என்பதை அவர்கள் இன்னும் அறியவில்லை இன்று குருநகர் மண்ணையும் மக்களையும் நேசித்த அவன் சுவாசம் நின்று விட்டது.

| | |
|---|---|
| முழுப்பெயர் | : டோறஸ் வியானிமூர் இராஜசிங்கம் |
| பிறப்பு | : 04.03.1935 |
| தந்தைபெயர் | : A. R. M. இராஜசிங்கம் |
| தாயார் பெயர் | : அன்ரனி எலிசபெத் |
| முகவரி | : சென் யேம்ஸ் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். |
| தொழில் | : உள்ளூராட்சி நிர்வாக உத்தியோகத்தர் |
| இறப்பு | : 23.06.2010 |

மதிப்பு மிக்க குடும்பத்தில், குருநகரில் , பிறந்த இவர் பல்பரிமாண ஆளுமையும், சமூக, சமய மேம்பாட்டுச் சிந்தனையும், தவறுகளைச் சுட்டிக்காட்டி அதனை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளையும் சொல்ல வல்லவர். குருநகர் மக்களின் பூர்வீகத்தினை ஆராய்ந்து குருகுல மக்களின் மாண்பினை வெளிக்கொணர்ந்து 'Who Are The Kurukulams of Jaffna' என்ற ஆய்வு நூலை ஆங்கிலத்தில் வெளியிட்ட தலைசிறந்த கல்விமான் அமரர் கலாநிதி. அருட்திரு P.A.J.B. அன்ரனைனஸ் அடிகளார் திரு. டோறஸ் அவர்களது சிறிய தந்தையார் ஆவார்.

திரு. டோறஸ் அவர்களின் தந்தையார் அமரர் திரு. A.R.M. இராஜசிங்கம் அவர்கள் Walker & Greiu கம்பனியில் நிர்வாக இயக்குநராயிருந்ததுடன் தேசிய பிராந்திய ரீதியான பல நலன்புரி அமைப்புக்களின் தலைவராயிருந்து குருநகரின் மேம்பாட்டுக்காய் உழைத்தவர். மேலும் டோறஸ் அவர்களது சிறிய தந்தையாராகிய அமரர் மேஜாய் அவர்களும் திரு. பென் ஏபிரகாம் அவர்களும் பல சமூக அமைப்புக்களின் ஊடாக குருநகரின் மேம்பாட்டுக்காய் உழைத்தவர்கள். இந்தப் பின்புலத்தில் வந்த திரு. டோறஸ் அவர்கள் இன்னும் மேலான பங்களிப்பினை குருநகர் சமூகத்திற்கு வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. கல்வி, கலை, கலாசார, சமய, பொருளாதார விளையாட்டு என விரிந்து செல்லும் பல துறைகளிலும் கால்பதித்து குருநகரின் மேம்பாட்டுக் காய் அவர் வழங்கிச் சென்ற சேவைகள் அனந்தம். மிகவும் குறிப்பாக குருநகர் மக்களின் பாரம்பரியத் தொழிலை விடுத்து இளைஞர்களை பல்வேறு அரச சேவைகளிலும், தனியார் சேவைகளிலும் ஈடுபடுத்தி மிகப் பெரும் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாயிருந்தவர் திரு. டோறஸ் என்றால் அது மிகையாகாது.

பள்ளிப்பருவத்திலே புனித யாகப்பர் ஆலய திருப்பாலத்துவ சபையில்(பீடப்பணியாளர்சபை) அவரது சேவை ஆரம்பமாகியது. இச்சபையின் செயலர் / தலைவராக இவர் சேவையாற்றிய காலத்தில் சபை அங்கத்தவர்களுக்கு ஆங்கிலம், லத்தீன் மொழியில் செபம் சொல்லிக் கொடுத்ததுடன் தலமைத்துவம், விளையாட்டு முதலிய பயிற்சிகளை சிறப்பாக வழங்கினார். இவரது காலப்பகுதியில் இச்சபையில் பயின்ற வர்களே பின்னர் சமூகத்திலும், வெளியிடங்களிலும் நிர்வாகப் பொறுப்புக் களில் துலங்கினார்கள் என்பது வரலாறு கண்ட உண்மை. மேலும் பலர் சமூகத்தில் சிறப்பான செயற்பாடுகளில் ஈடுபட்டதுமல்லாமல் கலை, கலாசார துறைகளில் பல சாதனைகளையும் படைத்துள்ளார்கள்.

இவர் குருநகர் கலைக்கழகம் என்ற அமைப்பை தமது நெருங்கிய ஆற்றல் மிக்க நண்பர்களுடன் உருவாக்கி அதன் பன்முகப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் ஊடாக இளைஞர்களை வழிப்படுத்தி அவர்களை ஆளுமை மிக்கவர்களாக உருமாற்றிய பெருமையும் இவரையே சாரும். மேலும் இந்த கலை அமைப்பின் மூலம் பல சமூக நல திட்டங்களை முன்னெடுத்து குடியிருப்பு, விளையாட்டு மைதானம், தொழில் வாய்ப்பு மற்றும் இன்னோரன்ன சேவைகளை பெற உழைத்தவர்.

இந்த அமைப்பின் ஊடாக புத்தொளி எனும் இதழினை குருநகரின் முதலாவது சஞ்சிகை யாக உற்பவித்த பெருமையும் இவரையே சாரும். இவரது அகராதியில் முடியாது என்ற சொல்லே இல்லை எனலாம். எந்தக் கருமத்தில் ஈடுபட்டாலும் அதில் மிகுந்த நம்பிக்கையுடனும், தற்துணிவுடனும் செயற்பட்டு வெற்றி காணும் வல்லமையுடையவர் இவர். இவரது செயற்பாடுகளில் ஆர்வம் கொண்ட காரணத்தினால்தான் அப்போதைய குருநகரின் இளைஞர்கள் பலர் தமக்கென பல கலை, சமூக விளையாட்டு மன்றங்களை உருவாக்கினார்கள். குருநகரின் அடையாளங்களை வீரம் செறிந்த விளையாட்டுகளிலும், நுட்பம் மிகுந்த கலைச் செயற்பாடுகளிலும் சமூக முன்னெடுப்புக்களிலும் தம்மை அர்ப்பணித்து வெற்றி கண்டார்கள்.

1971இல் இத்தகைய அமைப்புக்களின் எண்ணிக்கை குருநகரில் 21 ஆக இருந்தது. இந்த அமைப்புக்களின் சக்தியினை ஒன்றுதிரட்டி அதன்மூலம் சமூகத்திற்கு வலுவான சேவை செய்யவேண்டும் என்ற மேலான நோக்கிலேயே அப்போதைய பங்குத்தந்தை வணபிதா. நீ.ம. சவிரிமுத்து அடிகளின் வழிகாட்டலில் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னனி என்ற பொதுவான அமைப்பு பிறந்தது. அதன் முதலாவது தலைவர் திரு. டோறஸ் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்


1960ம் ஆண்டில் வெளியிடப்பட்ட புனித யாகப்பர் ஆலயத்தின் நூற்றாண்டு மலர் முழுமையாக இவரது கைவண்ணத்திலே உருவான தென்பதை யாவரும் அறிவர். புனித யாகப்பர் ஆலயம் பற்றிய வரலாற்றுத் தகவல்களை அரும்பாடுபட்டுத் தேடி குருநகர் மக்களின் பதிவுகளை முதன் முறையாக ஆவணப்படுத்திய பெருமை இவருக்குரியதே. இன்று அந்த ஆவணங்கள் ஆய்வாளர்கள் பலரால் தேடப்பட்டு விரிவான ஆய்வுக்குட் படுத்தப்படுவது நமக்குப் பெருமை தருவதாகும். குருநகர் கலைக்கழகத்தின் ஊடாக அவர் ஸ்தாபித்த புனித கிறிஸ்தோப்பர் கடற் சாரணர் இயக்கத்தின் செயற்பாடுகள் பிரமிக்கத்தக்கவை. அதன் சேவை அடையாளம் காணப் பட்டு அதற்காக அரச விருது பெற்றமை மிகவும் பாராட்டத்தக்கது. மேலும் இன்றுவரை அவர் மறைந்த பின்பும் இவ்வமைப்பு தொடர்ந்தும் சேவை யாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

திரு. டோறஸ் அவர்களின் மிகச்சிறந்த சிறப்பம்சம் என்னவென் றால் சமூகத்தின் அல்லது அமைப்புக்களின் சகல தொடர்பாடல்களையும் தாமே தனி மனிதனாக தயாரித்து தட்டச்சு செய்து தேவையானவற்றை றோணியோ மூலம் பிரதி பண்ணி (எல்லாம் அவரது சொந்தச் செலவில்) சம்பந்தப்பட்டவர்களுடன் கடிதம் மூலமோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளும் தனித்துவ மான பண்பு. இது எவரிடமும் காணப்படாத ஒரு பண்பு என்பது வியப்புக்கு ரியதாகும்.

அவரது அர்த்தமுள்ள வாழ்வு இன்றைய இளைஞர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமையவேண்டும். நமக்காக மட்டுமல்லாது பிறருக் காகவும், சமூகத்திற்காகவும் வாழுகின்ற பெரும் பண்பினை திரு.டோறஸ் அவர்களிடம் கற்றுக் கொண்டு அதனைக் காவிச் சென்று நமது அடுத்த சந்ததிக்கும் கொடுப்பதே நாம் திரு.டோறஸ் அவர்களுக்காகச் செய்யக் கூடிய நன்றிக்கடன்.

- V.J.கொன்ஸ்ரன்ரைன்


# விருது பெற்றவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு. மரியதாஸ் கியூமன் (B.Com)
முதுமாணி (M.A)
கணக்கியல்துறை



திரு. அன்ரனி சுஜீவன்
தொழில் நிர்வாகமாணி (B.B.A)
முகாமைத்துவ வணிகபீடம்



திருமதி சுதர்சினி கரன்சன்
கலாவித்தகர்
நுண்கலைமாணி (B.F.A)



திரு. இ. லொ. அன்சிலின் பெகின்
கலைமாணி (B.A)
கலைத்துறை



திரு. அ. யோன் மில்ரன்
கலைமாணி (B.A)
புவியியல் சிறப்புத்துறை



திரு. யே. இக்னேஷியஸ் பிரபா
கலைமாணி (B.A)
கலைத்துறை



திருமதி இ. மேரி நீற்றா
கலைமாணி (B.A)
கலைத்துறை



செல்வி ஜி. மேரி றஞ்சினி
கலைமாணி (B.A)
கலைத்துறை



திரு. கு. இராயப்பு (கலையார்வன்)
அரச சாகித்திய விருது - 2010
நாடக இலக்கியம்



செல்வன் சூ. அ. யூட் லியோன்
வணிகமாணி (B.com)
வணிகத்துறை



செல்வன் நெ. அனோஜ் கிளமென்சன்
இளைஞர் விருது (யாழ். மாவட்டம்) - 2009
ஓர்கன்




செல்வி ம. எலிஸ் ஏஞ்ஜெல்ஸ்
தேசிய இளைஞர் விருது - 2009
சிறுகதை



13.11.1993 அன்று சுப்பர்சோனிக் விமானக் குண்டுத் தாக்குதலின்போது ஏற்பட்ட சேதங்கள். இத்தாக்குதலில் 9 பேர் இறந்தனர்.

கற்குவியலின் மத்தியில் சேதமின்றிக்கிடந்த கல்லறை ஆண்டவர் சுரூபம்.



குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தினால் (ஆதரவு: சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்), இல. 28 மாட்டின் வீதியிலுள்ள 'ஜெயந்த் சென்றர்' இல் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டது.